மாலை முரசு

பக்கங்கள் 18


முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 07 வியாழக்கிழமை 23.11.2023 அதிர்வு 115

## பொலிஸாரின் தாக்குதலில் குடும்பப் பெண் படுகாயம்!

### முல்லைத்தீவில் கொடூரம்

- முல்லைத்தீவு நிருபர் -

முல்லைத்தீவு, விசுவமடு – பாரதிபுரம் பகுதியில் பஸ்ஸில் ஏறுவதற்றாக மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பப் பெண்ணைப் பொலிஸார் 04



# பொலிஸாரால் உடைத்தெறியப்பட்ட மட்டக்களப்பு - தரவை மாவீரர் தூபி!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, கிரான் – தரவையில் மாவீரர்களுக்கு விளக்கு ஏற்றுவதற்காக அமைக்கப்பட்டிருந்த தூபி பொலிஸாரால் தகர்த்தெறியப்பட்டுள்ளது.

இந்தத் துபியை இன்று வாழைச்சேனை பொலிஸார் தகர்த்தெறிந்துள்ளனர்.

சட்டத்துக்கு முரணாக தூபி அமைக்கப்பட்டுள்ளது என்று வாழைச்சேனை பொலிஸார் நீதிமன்றத்தின் கட்டளையைப் பெற்று குறித்த தூபியைத் தகர்த்தெறிந்துள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர்களுக்குச் சுடர் ஏற்றுவதற்காக இந்தத் தூபி அமைக்கப்பட்டிருந்தது.

# ராஜபக்ஷ கும்பலின் குடியுரிமையை பறிக்கக் கோரி கையெழுத்து வேட்டை

## கொழும்பில் ஆரம்பித்து வைத்தார் சஜித்







இலங்கையை வங்குரோத் தாக்கிய நபர்களின் குடியுரிமையை இரத்துச் செய்யுமாறு கோரியும், அவர்களுக்கு இனிமேலும் அரச ஆதரவின் கீழ் சலுகைகள் வழங்கப் படக்கூடாது என்று வலியுறுத்தியும், நாட்டின் வங்குரோத்து நிலையால் பாதிக்கப்பட்ட 220 இலட்சம் பேருக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் எனக் கோரியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் இணைந்து இன்று 04

## சந்தேகநபரை துரத்திச் சென்ற பொலிஸ் மாயம்

ஜா – எல பிரதேசத்தில் சந்தேகநபரைத் துரத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காணாமல்போயுள்ளார் என்று ஜா – எல பொலிஸார் 04

## கொடிகாமத்தில் மாவீரர் கொடிகளை அறுத்து எடுத்துச் சென்ற விஷமிகள்






(த.சுபேசன்)

கொடிகாமம் – பருத்தித்துறை வீதியில் இராணுவ முகாம் முன்பாக அமைந்துள்ள மாவீரர் நினைவேந்தல் 04

## 477 கிலோ பீடி இலைகள் கடற்படையிடம் சிக்கின!

(ரஸீன் ரஸ்மின்)



புத்தளம், கற்பிட்டி – இப்பந்தீவு கடல்பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து 477 கிலோகிராம் 04

### யாழில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

## பொலிஸ் உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிள் தீக்கிரை

(வடமராட்சி கிழக்கு நிருபர்)



யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி – நித்திய வெட்டைப் பகுதிக்குக் கடமை 04

## முல்லை. மேலதிக அரச அதிபராக எஸ்.குணபாலன்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராக (நிர்வாகம்) எஸ்.குணபாலன் 04




# அணிஞ்சியன்குளத்தில் விபத்து; ஒருவர் அந்த இடத்திலேயே பலி!

(எஸ். தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அணிஞ்சியன்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவமானது இன்று (23) காலை 6.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது–

ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் பணியாளர்களை ஏற்றும் பஸ் ஒன்று ஆடைத்தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றுவதற்காக சென்றுள்ளது.

பின்னால் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பணியாற்றிவரும் இருவர் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளனர்.

இவர்களைக் கவனிக்காமல் மாங்குளம் வெள்ளாங்குளம் பிரதான வீதியில் இருந்து அணிஞ்சியன்குளம் 2 ஆம் பகுதி ஸ்ரீ ஷீரடிசாயி பாபா இல்ல வீதிக்கு திரும்பியபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பஸ்ஸுடன் மோதி விபத்துச் சம்பவித்துள்ளது.

பஸ் எந்த சமிக்ஞைகளுமின்றி திடீரென திரும்பியதாகவும் இதனால் பஸ்ஸுடன் மோதி தான் தூக்கி வீசப்பட்டதாகவும் மற்றயவர் பஸ் சில்லுக்குள் சிக்குண்டு இறந்ததாகவும் காயமடைந்தவர் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தை சேர்ந்த 48 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா சிவநாதன் ஆவார்.

சம்பவ இடத்துக்குச் சென்று மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் இந்த பஸ் வழமையாக வேகமாக செல்வதாகவும் இதற்கு முன்னரும் இதே பஸ் இந்தப் பகுதியில் விபத்துக்குள்ளானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையிலும் இந்த பஸ் மாடு ஒன்றை மோதியதில், மாடு இறந்த தாகவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோருகின்றனர்.

# இளைஞனின் மரணம் இதயத்தை வருத்துகிறது!

## அமைச்சர் டக்ளஸ் கவலை தெரிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

கடுமையான குற்றவாளிகள் கூட நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சிறையிருந்து வருகிற நிலையில் சந்தேகத்தின் பேரில் கைதான சித்தங்கேணி இளைஞன் நாகராஜா அலெக்ஸ் மரணமான செய்தி எல்லோர் இதயங்களையும் வருத்துகின்றது.

ஈழ மக்கள் ஜனநாயக்கட்சி செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

சந்தேகத்தின் பேரில் கைதான ஒருவர் முழுமையான நீதி விசாரணைக்கு முன்பாகவே மரணத்தை தழுவியுள்ளார். இது நடந்திருக்கவே கூடாத கொடிய துயர் நிகழ்வு.

இது குறித்த விசாரணைகள் நடந்து வருகின்றன. உண்மைகள் கண்டறியப்பட்டு நியாயங்கள் உணர்த்தப்பட வேண்டும்.

மரணமடைந்த இளைஞனின் குடும்பத்தவர்கள் படும் இழப்பின் வலிகளில் பங்கெடுக்கின்றேன். ஆறுதலும்... ஆழ்மன அஞ்சலியும்!.– என்றுள்ளது.

# அம்மன் தாலியை எடுத்து அடகு வைத்துள்ள பூசாரி!



(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா சாமிமலை பெரிய சோளம் கந்த தோட்டத்தில் அம்மன் ஆலயத்தில் அம்மன் சிலைக்கு சாத்தப்பட்டிருந்த தங்க தாலி தாலி மணி போன்ற சுமார் 95 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க ஆபரணங்கள் திருட்டுப் போயுள்ளன.

இது தொடர்பில் நேற்று ஆலய நிர்வாக சபைக்கு தெரிய வந்ததை தொடர்ந்து தோட்ட பொது மக்கள் ஆலயத்தின் முன்பாக த் திரண்டனர்.

இது தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதனையடுத்து ஆலயத்தின் பூசகர் ஆபரணங்களை அடமானம் வைத்திருப்பது தெரியவந்துள்ளது.

அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டு ஆபரணங்களை மீட்டு தருவதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்த விடயம் சம்பந்த மாக நேற்று (22) மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.





# மாவீரர்கள் பெயர்களுடன் நினைவு வளாகம் முள்ளியவளையில் நேற்றுத் திறந்து வைப்பு

மாவீரர் நாளை முன்னிட்டு வடக்கு, கிழக்கு பகுதிகளில் மாவீரர்கள் நினைவு சுமந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகாமையில் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் 25ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுப் பலகைகள் வைக்கப்பட்ட நினைவு வளாகம் நேற்று (22) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திறப்பு நிகழ்வில் மாவீரர் நினைவாக பொதுச்சுடரை முன்னாள் மாணவர்கள் போராளியும் மாவீரரின் சகோதரரும் ஏற்றிவைக்க மாவீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட பெயர்கள் தாங்கிய நினைவு பலகைக்கான சுடரை மாவீரரின் பெற்றோர் ஒருவர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பெயர் பலகையைச் சட்டத்தரணி வி.மணிவண்ணன் திறந்து வைத்தார்.

25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் வீரச்சாவடைந்த ஆண்டுகள் இதில் பொறிக்கப்பட்டுள்ளன. இது எதிர்வரும் 27 ஆம் திகதிவரை மக்களுக்காக காட்சிப்படுத்தப்படவுள்ளது.









# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பொலிஸ் உத்தியோகத்தரின்...**

நிமித்தம் தனது மோட்டார் சைக்கிளில் சென்று மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்திவிட்டு, வீடொன்றில் விசாரணை நடவடிக்கையை மேற்கொண்டார். இதன்போது வீதியில் நின்ற மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது.

தீ வைத்தவர்கள் தப்பிச் சென்ற நிலையில் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**முல்லை. மேலதிக...**

இன்று கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிக அரச அதிபராகக் (நிர்வாகம்) கடமையாற்றிய க.கனகேஸ்வரன் நிர்வாக சேவை விசேட தரத்துக்குத் தேர்வாகி வடக்கு மாகாண சபைக்கு மாற்றலாகிச் சென்ற நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே குணபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

**சந்தேக நபரை...**

இன்று தெரிவித்தனர்.

ஜா – எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

இவர் ஆற்றில் குதித்துத் தப்பிச் செல்ல முயன்ற சந்தேகநபர் ஒருவரைத் துரத்திச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஜா – எல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**பொலிஸாரின் தாக்குதலில்...**

தாக்கியதில் அந்தப் பெண் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் அந்தப் பெண், அவரது மகன், பேரக் குழந்தை ஆகியோர் உள் வீதியில் இருந்து பிரதான வீதிக்கு பஸ்ஸில் ஏறுவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

இதன்போது பாரதிபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் இருந்து வந்த இரு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்த அவர்களை மறித்த போது மறித்த இடத்திலிருந்து 20 மீற்றர் தள்ளி மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளனர்.

அப்போது அவ்விடத்துக்கு ஓடி வந்த பொலிஸார் மறித்த இடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்த முடியாதா? எனக் கேட்டு மகனையும் பின்னால் இருந்த தாயான பெண்ணையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த தாய் உடனடியாக தரும்புரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

**ராஜபக்ஷ கும்பலின்...**

கொழும்பு – புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகப் பொது மக்கள் கையெழுத்துத் திரட்டும் பணியை ஆரம்பித்தது.

இதன் பிரகாரம் 'நீதிக்கான மக்கள் ஆணையைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் கையெழுத்துத் திரட்டும் வேலைத்திட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டதுடன் மதத் தலைவர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் திரண்டு தங்களின் கையொப்பங்களைப் பதிவிட்டனர்.

**477 கிலோ பீடி...**



பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தக் கடல் பிரதேசத்தில் வடமேற்கு கடற்படைக் கட்டளைக்குச் சொந்தமான விஜய கடற்படையினர் நேற்று விசேட கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது கடல் பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் உரைப் பைகள் மிதந்து கொண்டிருப்பதை அவதானித்த கடற்படையினர், அந்த உரைப் பைகளைச் சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டன எனச் சந்தேகிக்கப்படும் பீடி இலைகள் அடங்கிய 14 மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கையின் பல இடங்களுக்கு விநியோகிக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட அந்த பீடி இலைகள் அடங்கிய மூடைகளைச் சந்தேகநபர்கள், கரையோரப் பகுதிக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் அதனைக் கடலில் கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாகக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகத் தமது பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன எனவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

**கொடிகாமத்தில்...**

இடத்தில் கட்டப்பட்டிருந்த மாவீரர் நினைவேந்தல் கொடிகள் நேற்று இரவு இனந்தெரியாத நபர்களால் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முன்னாள் உப தவிசாளர் தலைமையிலான குழுவினர் நேற்று இரவு 8 மணி வரை நினைவேந்தல் இடத்தில் சிரமதானம் மேற்கொண்டு – நினைவுக் கொடிகளைக் கட்டி விட்டு சென்றிருந்த நிலையில் மேற்படி கொடிகள் அனைத்தும் இனந்தெரியாத நபர்களால் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பொலிஸார் தகுந்த விசாரணை மேற்கொண்டு உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று முன்னாள் உப தவிசாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.





# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் பெண் இள வயதில் நீதிபதியாகத் தெரிவானார்!



இலங்கை நீதித்துறை வரலாற்றில் மிக இளவயதில் நீதிபதியாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் பெண் ஒருவர் தெரிவாகியுள்ளார்.

வரலாற்றில் மிக இளவயது தமிழ் பெண் நீதிபதியாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாதுரி நிரோசன் என்பவரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் முதலாம் திகதி பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார்.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் பழைய மாணவியான இவர் தனது 31 ஆவது வயதில் நீதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

மாதுரி நிரோசன் நாடளாவிய நீதியில் இடம்பெற்ற நீதிபதிகளுக்கான போட்டியில், அகில இலங்கை ரீதியில் 12 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவான இளம் தமிழ் நீதிபதி என்ற சிறப்பையும் இவர் பெற்றுள்ளார்.

# ‘ஆண்டிபயோடிக்’ மருந்துப் பாவனையால் மனிதர்களுடைய ஆயுள் குறைவடைகிறது!

மருத்துவரின் பரிந்துரையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளைப் பயன்படுத்துவதால், உடலின் உயிர் வாழ்வுக்குத் தேவையான பக்ரீரியாக்கள் இறந்து போய்விடும். இதனால் சுமார் 50 ஆண்டுகளுக்குள் மனிதன் மரணத்தை தழுவ நேரிடும் என்று லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நவம்பர் 18 முதல் 24 வரை உலக ஆண்டிபயோடிக் விழிப்புணர்வு வாரம்.

இந்த நிலையில் கருத்து தெரிவித்த போது அவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக நுண்ணுயிர் எதிர்ப்பு நிபுணர்கள் இதை ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்துள்ளனர்.




நுண்ணுயிர் எதிர்ப்பிகள் பக்ரீரியாவை வலுவிழக்கச் செய்து கொல்லும். அதிகப்படியான நன்மை பயக்கும் பக்ரீரியாக்களும் இதனால் கொல்லப்படுகின்றன.

எனவே மிகவும் அவசிய மான சூழ்நிலைகளைத் தவிர, தேவையில்லாமல் குழந்தைகளுக்கு ஆண்டிபயோடிக் மருந்துகளை வழங்க வேண்டாம்.

நுண்ணுயிர் எதிர்ப்பில் பக்ரீரியாத் தொற்று ஏற்பட்டால் மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஒருவரின் வயது மற்றும் எடை உட்பட பல காரணிகளை கருத்தில் கொண்டு மருத்துவர்கள் இதை பரிந்துரைக்கின்றனர்.

வைரஸ் காய்ச்சல் மற்றும் வயிற்றுப் போக்குக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகள் தேவையில்லை.

இருமல், சளி மற்றும் சிறு காயங்களுக்கு, நுண்ணுயிர் எதிர்ப் பிகளை மருத்துவரின் பரிந்துரைப்படி மட்டுமே எடுக்க வேண்டும்.-என்றார்.

# இத்தாலியில் ரயில் மோதி இலங்கையர் ஒருவர் பலி!

இத்தாலியில் ரயில் மோதி இலங்கையர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வென்னப்புவ - பொரலஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த நிரோஷன் பெர்னாண்டோ என்ற 46 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார்.

ரயில் நிலையத்தின் நடைமேடையில் நின்று கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெறுள்ளது.

இந்த நபர் ரயில் நடைமேடைக்கு அருகில் நின்று கொண்டிருந்த போது அதிவேகமாக பயணித்த ரயிலின் வேகத்தால் ஏற்பட்ட காற்றால் தள்ளுப்பட்டதில் ரயிலுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆணை இழந்த நாடாளுமன்றம்

இப்போதுதான் சரியான பிரச்சினையை அடையாளம் கண்டு, அது குறித்து வெளிப்படையாகப் பேச முன் வந்திருக்கிறார் முன்னாள் நீதி அமைச்சரும், தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு அப்போதைய நிதி அமைச்சர்கள், மத்திய வங்கி மற்றும் நாணய நிதி அதிகாரிகள் மட்டுமல்லர், நாடாளுமன்றமும் பொறுப்பேற்க வேண்டும் என்று நாடாளுமன்றத்திலேயே கூறியிருக்கின்றார் முன்னணி சட்டத்தரணியான அலி சப்ரி.

அப்படிப் பொருளாதார விவகாரங்களைப் பிழையாக-தவறாக-கையாண்டமைக்காகஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிதியமைச்சராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்கள் பேராசிரியர் டபிள்யூ. டி லக்ஷ்மன் மற்றும் அஜித் நிவாட் கப்பரால், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜே.ஜயந்தர மற்றும் நாணய நிதியம் ஆகிய தரப்பினர் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டவர்கள் என்ற சாரப்பட உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் கூறிவிட்டது.

ஆனால், இவர்கள் எல்லோரும் நாட்டின் பொருளாதார விவகாரங்கள் தொடர்பிலான அரசியல் கொள்கைத் தீர்மானங்களை எடுத்த விடயத்தில் தவறு இழைத்துள்ளனர் என்பது உயர்நீதிமன்றத்தின் அவதானிப்பு ஆகும் என்கிறார் அலி சப்ரி.

ஆயினும், இத்தகைய கொள்கைத் தீர்மானங்களைக் கண்காணித்து, கட்டுப்படுத்தி, வழிநடத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உண்டு. ஆகவே தவறான பொருளாதாரக் கொள்கைகளின் கையாள்கையினால் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்குமானால், அதற்கு நாடாளுமன்றமும் கூடப் பொறுப்பு என்று அமைச்சர் அலி சப்ரி இப்போது குறிப்பிடுகின்றமை முற்றிலும் சரியானதுதான்.

அந்தப் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திய காரணத்துக்காகத்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை துறந்து, மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை துறந்து, பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறந்து வெளியேறினர் என்றும் கூறப்பட்டது.

மேலும் அது போதுமான நடவடிக்கை அல்ல, முழுநாடாளுமன்றமுமேபதவியைத்தொடரஅருகதை அற்றது என்று எதிர்க்கட்சிகள் ஒட்டுமொத்தக் குரலில் வலியுறுத்தி வருகின்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜே.வி.பி. அனைத்துமே தற்போதைய நாடாளுமன்றம் மக்கள் ஆணையை இழந்துவிட்டது என்று வற்புறுத்தி வருவது இதனால்தான்.

இந்த நாடாளுமன்றம் மக்கள் ஆணைய இழந்து காலாவதியான ஒன்று என்றால், அது ஒன்று கூடி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தவரும் கூட மக்கள் ஆணையை பெறாதவர்தான் என்பது வெளிப்படையானது.

அதனால்தான், நாடாளுமன்றத்தையும் கலைத்து, பொதுத்தேர்தலுடன் ஜனாதிபதித் தேர்தலையும் உடனடியாக நடத்துங்கள் என்று எதிர்க்கட்சிகள் ஒற்றைக்காலில் நின்று வலியுறுத்தி வருகின்றன.

அந்தக் கோரிக்கை நியாயமானது என்று நேரடியாக அதை ஆமோதிக்காமல் விட்டாலும் கூட, நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவுக்கு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்போது பொதுத் தேர்தலில், அவரை முன்னிறுத்தி அதிகாரத்தைப் பிடித்த நாடாளுமன்றமும் கூட பொறுப்புத்தான் என்றுரைப்பதன் மூலம் ஏற்றுக் கொள்கின்றார் அமைச்சர் அலி சப்ரி.

பொதுத் தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலையும் உடன் நடத்துவதன் மூலம், மக்கள் ஆணையை இழந்த தரப்புகளினால் நாடு நிர்வகிக்கப்படுவதில் இருந்து நாட்டை இயன்ற விரைவில் விடுவிக்க முன்வர வேண்டும். அதுவே நியாயமானதாகும்.

# டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் திருமலையில் இன்று ஆரம்பம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை நகரப் பகுதியில் மிக வேகமாக அதிகரித்து வரும் டெங்கு உயிர்க் கொல்லி நோயை ஒழிக்கும் விசேட வேலைத் திட்டம் இன்று (23) திருகோணமலை நகரப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

கல்வி அமைச்சு, சுகாதார திணைக்களம், முப்படைகள், ரூபவாஹினி தொலைக்காட்சி கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து இதனை ஆரம்பித்துள்ளன.

உவர்மலை சார்ந்த பாடசாலை, அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் குடியிப்புகள் விசேட அவதானத்துடன் மேற்பார்வை செய்யப் படவுள்ளன.

மேற்பார்வையில் ஈடுபடவுள்ள அதிகாரிகள் குழு திருகோணமலையின் நகரப் பகுதியில் உள்ள, தெரிவு செய்யப் பட்டுள்ள பாடசாலைகளுக்கு ஊடகவியலாளர்களுடன் சென்று பாடசாலைகளின் நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கையிடுவர்.

பரிசோதனைகள் கட்டடங்களின் உள்ளேயும் வெளியேயும் நடைபெறும். பாடசாலையின் காணி, கூரை என்பனவும் பரிசோதனைக்கு உள்ளாகும். குளிர்சாதனப் பெட்டிகளும் பரிசோதிக்கப் படும்.

இந்தக் கண்காணிப்புச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

மாணவர்கள், ஆசிரியர்கள், அரச நிறுவன பிரதிநிதிகள், பாதுகாப்புப் படையினர், பொலிஸார் மற்றும் பொது அமைப்பு பிரதிநிதிகள் 1000 பேர் கலந்து கொள்ளவுள்ள விசேட விழிப்புணர்வு செயலமர்வு எதிர்வரும் டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி,திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**

"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்."
மிகைல் கோபர்ச்சேவ் (சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)




# யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் இரண்டு அமர்வுகளாக முத்தமிழ் விழா!

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி முத்தமிழ் விழா திங்கட்கிழமை (21) காலை மற்றும் மாலை என இரண்டு அமர்வுகளாக கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமாநந்தம் தலைமையில் நடை பெற்றது.

காலை அமர்வு பேராசிரியர் கா. சிவத்தம்பி அரங்கு எனவும் , மாலை அரங்கு நவாலியூர் சேமசுந்தரப் புலவர் அரங்கு எனவும் பெயரிடப்பட்டிருந்தன.

காலை அமர்வில் பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தகைசார் வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன், இலங்கை வங்கி யாழ்ப்பாண இரண்டாம் கிளையின் முகாமையாளர் எ. சந்தனு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக வலி கிழக்குப் பிரதேச சபையின் செயலர் இ.பகீரதன் , நீர்வேலி பவானி களஞ்சிய உரிமையாளர் பொன்னையா கிருஷ்ணானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாலை அமர்வுக்குப் பிரதம விருந்தினராக தென். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறை விரிவுரையாளர் கலாநிதி க.ரகுபரனும் சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி சி. சிவன்சுதன் , கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் விக்னேஸ்வரி நரேந்திரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் ஓய்வு நிலை விரிவுரையாளர் மு. கௌரிகாந்தன், முன்னாள் ஆசிரிய மாணவி காயத்திரி அகிலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் மாணவ ஆசிரியர்கள் முத்தமிழின் இயல், இசை, நாடகம் ஆகியவற்றில் ஆற்றுகைகளை வெளிப்படுத்தினர்.

மாணவ ஆசிரியர்களுக்கு தமிழ் மொழி சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன .

நிகழ்ச்சிகளை பெருமளவில் மாணவ ஆசிரியர்களும், பொது மக்களும் பார்வையிட்டனர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக தமிழ் தந்த தாமோதரம் பிள்ளை என்னும் வரலாற்று நூல், அதன் ஆசிரியரும் தமிழ்மன்ற காப்பாளருமான பாலசிங்கம் பாலகணேசனால் வெளியிடப்பட்டது.

















# பசுமை இயக்கத்தின் கார்த்திகை வாசம் கார்த்திகைப் பூ சூடி வீசத் தொடங்கியது!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கார்த்திகைப் பூ சூடி நேற்று புதன்கிழமை (22) உணர்வு பூர்வமாக ஆரம்பமாயது.

கண்காட்சி நடைபெறும் மலர்முற்றம் காட்சித் திடலை வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தன் தலைமையில் நடைபெற்ற தொடக்க விழாவில் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், சமூக அரசியல் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.


பெருந்திரளான மக்கள் மழைக்கு மத்தியில் கலந்து கொண்டனர். இவ்விழாவில் நீர்வையூர் பொன்சக்தி கலாகேந்திரா மாணவிகளின் மர நடுகைப் பாடல் நடன நிகழ்ச்சி இடம்பெற்றது.

வடக்கு மாகாணசபை கார்த்திகை மாதத்தைத் தமிழர் வாழ்வியலில் இம்மாதம் சுற்றுச்சூழல், ஆன்மீகம், பண்பாடு மற்றும் அரசியல் ரீதியாக கொண்டிருக்கும் பல்பரிமாண முக்கியத்துவம் காரணமாக 2014 ஆம் ஆண்டு வடமாகாண மரநடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது.

பசுமை இயக்கம் ஆண்டுதோறும் இந்த மாதத்தில் மரநடுகையில் ஈடுபட்டு வருகிறது. அத்தோடு, பொது மக்கள் தரமான மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் உள்ளூர் தாவர உற்பத்தியாளர்களின் பங்கேற்புடன் மலர்க் கண்காட்சியையும் ஏற்பாடு செய்துள்ளது.

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை தினமும் காலை 8.30 மணி முதல் முன்னிரவு 7 மணிவரை கண்காட்சி நடைபெறவுள்ளது.

கண்காட்சியைப் பார்வையிடவரும் மாணவர்கள் அனைவருக்கும் பசுமை இயக்கத்தால் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.














# உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு மட்டு. செயலகத்தில் மருத்துவ முகாம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நவம்பர் 14 ஆம் திகதிய உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு தொற்றா நோய்களுக்கான மருத்துவ முகாம் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை (23) இடம் பெற்றது.

பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் மாவட்ட செயலகமும் இணைந்து இந்தத் தொற்றா நோய்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்தின. செயலக உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ முகாமையும் ஏற்பாடு செய்திருந்தன.

தற்போதைய காலத்தில் தொற்றா நோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது. இந்த நிலையில் உத்தியோகத்தர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் இந்த நிகழ்வு எற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி பிரசாந்தி லதாகரன், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திருநாவன், புளியந்தீவு பொது சுகாதார பரிசோதகர் எஸ். தீபக்குமாரன் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# கவின்நிலைப் போட்டிகளில் வென்றோருக்குப் பரிசளிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் தரம் 3 மற்றும் தரம் 4 வகுப்புகளின் கவின்நிலைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளரும், உதவிக் கல்வி பணிப்பாளருமான யூ.எல். நியால் ஒழுங்குப் படுத்தலில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியர்களின் முறையான கலைத் திட்ட முகாமைத்துவ செயற்பாடுகள், மாணவர்களின் மனவெழுச்சி செயற்பாடுகள், புத்தாக்க சிந்தனைகள், கற்றல் கற்பித்தல் செயன்முறையில் நவீன தகவல்சார் தொழில்நுட்ப சாதனங்களின் பிரயோகம், பெற்றோர் தரவட்ட பங்களிப்பு, பொலித்தீன் அற்ற வகுப்பறை கழிவு முகாமைத்துவம் என்பவற்றின் ஊடாக உயிரோட்டமானதும், செயற்பாடுகளூடான புலன் சார்ந்த மறைமுக கற்றல் மாணவர்களிடத்தில் உருவாகின்ற "என்னுடைய அழகான வகுப்பறை" என்ற எண்ணக்கரு அடிப்படையில் இந்த கவின்நிலைப் போட்டி நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த போட்டியில் கலந்து கொண்ட மற்றும் வெற்றி பெற்ற தரம் -3,4 வகுப்பாசிரியர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றி கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம். ஜாபீர், பீ. ஜிஹானா ஆலிப், ஆசிரியர் ஆலோசகர்களான வை.ஏ.கே.தஸ்னீம், எம்.எம். சியாம், வளவாளர் எஸ்.எம்.எம். அன்சார் உட்பட கல்முனை கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# பாலமுனை ஆஸ்பத்திரிக்கு சுத்திகரிப்புப் பொருள்கள்

(சப்னா றிபாஸ் )

பாலமுனை பிரதேச வைத்திய சாலைக்கு அக்கரைப்பற்று அனீஸ் வர்த்தக நிலைய உரிமையாளர் அனீஸ் இருபது ஆயிரம் ரூபா பெறுமதியான சமையல் அறை மற்றும் சுத்தம் செய்வதற்கான பொருள்களை வைத்திய சாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் நௌபலிடம் வழங்கியுள்ளார்.



# தலவாக்கலை பாரதி தேசிய மட்டச் சாதனை

(மஸ்கெலியா நிருபர்)

2023 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை தமிழ் மொழி தின போட்டியில் தலவாக்கலை பாரதி மகா வித்தியாலயம் தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளது.

தமிழறிவு வினா விடை போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளது. இந்தச் சாதனைக்கு எனல் றொஸலீன் சிவராஜ், பௌலீன் மரியா செல்வேந்திரன், பால கிருஷ்ணன் பிரவீந்தன், சத்தியவாணி பாலசுப்பிரம்ணியம். சர்மிளாகாந்தி செந்தில்குமார் ஆகியோர் உந்து சக்தியாகச் செயற்பட்டுள்ளனர்.

இவர்களை ஆசிரியர் பெரியசாமி ரமேஷ்வரன் சிறந்த முறையில் பயிற்று வித்துள்ளார்.



# மலை நாட்டில் தொடரும் மழை; வான் கதவுகள் திறக்கப்பட்டன!

(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலை நாட்டில் தொடர் மழையால் காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன், விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்கங்களின் வான் கதவுகள் வழியாக நீர் வெளியேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் தாழ் நிலப் பகுதியில் உள்ள மக்களை மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட அரச அதிபர் நந்தன கலபட கருத்து தெரிவிக்கையில், அதிக மழை காரணமாக காசல்ரீ நீர்த்தேக்க அதன் கொள்ளளவை விட நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் வான் கதவுகள் வழியாக நீர் வெளியேற்றமாகிறது.

அதேபோல் விமலசுரேந்திர நீர் தேக்கத்தின் வான் கதவுகள் வழியாக நீர் வெளியேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து உள்ளது எந்த நேரத்திலும் வான் கதவுகள் வழியாக நீர் வெளியேற்றம் செய்யபடலாம். கென்யோன் லக்சபான பொல்பிட்டிய நவலக்சபான கலுகல ஆகிய நீர் தேக்கங்களின் வான் கதவுகள் வழியாக நீர் வெளியேற்றம் செய்யப்படுகிறது.

களனி கங்கையை அன்மித்த உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.- என்றார்.



# நிந்தவூரில் மரம் நடுகை!

(அபு அலா)

கிழக்கு மாகாணத்தில் 1000 பயன் தரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் மரம் நடும் நிகழ்வு நேற்று (22) நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் இடம்பெற்றது.

"மாகாணம் செழிக்க மரம் நடுவோம்" எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்த மரம் நடும் நிகழ்வு சங்கத்தின் பிரதித் தலைவர் ஏ.சி.அயாத்து முஹம்மது தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல் கலந்துகொண்டு மரத்தை நட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.எம்.றிம்ஸான், பொருளாளர், உறுப்பினர்கள் மற்றும் வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்




AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882





# அக்கரைப்பற்றில் இரத்ததானம்

(சியாத் .எம். இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யும் நோக்கில் 'உதிரம் கொடுத்து உயிர் காக்க உதவுவோம்' எனும் தொனிப் பொருளில் அக்கரைப்பற்று தொழில்நுட்ப கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் அக் கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியில் (22) நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் வேண்டுகோளுக்கு இணங்க, இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திறல் கொண்டு தொழில்நுட்ப கல்லூரி அதிபர் எம். எம்.ஹசன் மற்றும் பதிவாளர் எம்.ஏ.சி. றகீப் ஆகியோரின் நெறிப்படுத்தலில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முகாமில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப கல்லூரி உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கினர். இதில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



# வீரமுனையில் 37 மாணவர்களுக்கு பாராட்டு

வீரமுனையிலிருந்து பல்கலைக் கழகம் மற்றும் கல்வியியற் கல்லூரிக்கு கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பாராட்டு விழாவும் கௌரவிப்பும் கடந்த (19) ஞாயிற்றுக்கிழமை வீரமுனை ராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வீரமுனை 2கே2 சமூக நல அமைப்பு அதன் ஆலோசகர் ஏ.சுதர்சன் தலைமையில் நடத்திய இந்த விழாவில், ஆன்மீக அதிதியாக வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலய பிரதம குரு ஸ்ரீ நிமலேஸ்வர குருக்களும் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசனும் கலந்துகொண்டனர்.

கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலர் எஸ். எல். எம். ஹனீபா, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான பி. பரமதயாளன், விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா, சம்மாந்துறை பொலீஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி எம். சமீம், பாடசாலை அதிபர் ஈ.தயாநிதி ஆகியோர் கலந்துகொண்டனர்.முன்னதாக அதிதிகள் மற்றும் பாராட்டு பெறும் மாணவர்கள் பிரதான வீதியிலிருந்து பாண்ட் வாத்தியம் சகிதம் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.



2016 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியல் கல்லூரி ஆகியவற்றுக்குச் சென்ற சுமார் 37 மாணவர்கள் இந்த அமைப்பால் பதக்கம் சூட்டி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அமைப்பின் தலைவர் எம் கமல், செயலாளர் ஆர்.யோகலட்சுமி, பொருளாளர் என்.யோகேஸ்வரன் உள்ளிட்ட அமைப்பின் உறுப்பினர்கள், அதிதிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தனர்.

# பேராதனை மாணவர்களுக்குப் பயிற்சிப் பட்டறை



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான டிஜிட்டல் ஊடகக் கல்வியறிவு மற்றும் போலியான தகவல்களை இல்லா தொழித்தல் எனும் தொனிப்பொருளில் பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பீட தமிழ்த் துறை மாணவர்களுக்குப் பயிற்சி பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

எதிர்கால தலைவர்களை ஊக்குவித்தல் எனும் நோக்கில் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்தச் செயலமர்வு கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் பூரண ஆதரவுடன் இடம்பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின், கலைப் பீடத்தின் தமிழ்த்துறை இளங்கலை மாணவர்கள் இந்தப் பயிற்சி பட்டறையில் பங்கேற்றனர்.

# குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்தோருக்குப் பிரார்த்தனை!

**(ஹஸ்பர்)**

கிண்ணியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட குறிஞ்சாக்கேணி இயந்திரப் படகு விபத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்ந்து துஆப் பிராத்தனை செய்யப்பட்டுள்ளது.

விபத்து இடம் பெற்று இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு இன்று (23) காலை கிண்ணியா பிரதேச செயலர் எம்.எச்.எம்.கனி தலைமையில் குறிஞ்சாக்கேணி பால முன்றலில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, பாலத்தின் தற்போதைய நிலைப்பாடு எவ்வாறு இருக்கிறது. அதனால் பயணம் செய்வதால் ஏற்படப்போகும் அனார்த்தங்கள் தொடர்பாக விழிப்பூட்டப்பட்டது.



பாலத்தை நிர்மானிப்பதற்கான நிதியை சவூதி நிதியம் வழங்கவுள்ளது என்றும் அதற்கான கடிதத்தை வீதி அபிவிருத்தி அதிகாரசபை தங்களுக்கு அறியத்தந்துள்ளதையும் இதன்போது பிரதேச செயலர் தெளிவுபடுத்தியிருந்தார்.

# மாற்றுத் திறனாளிகளுக்கு நேர்முகத் தேர்வு



**(ஹஸ்பர்)**

மாற்றுத் திறனாளிகளை வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலையத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான மாணவர்களாக இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இன்று (23) இடம்பெற்றது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்தத் தொழில் பயிற்சி நிலையங்களில் தொழில் பயிற்சி பாடநெறிகளை கற்பதற்கான ஒரு வாய்ப்பாக காணப்படுகிறது.

தையல் பயிற்சி, இயந்திர தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடநெறிகளைக் கற்பதற்காக இந்த நேர்முகத்தேர்வு இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் த.பிரணவன், தொழில் பயிற்சி நிலைய பொறுப்பதிகாரிகள், சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்கள் இதில் கலந்து கொண்டனர்.



■ நவீனன்

# தமிழர் தேசத்தின் கார்த்திகைப் பூ!

எத்தகைய அடக்கு முறை வந்தபோதும், ஆலயங்களில் மணி ஒலிப்பதோ, தீபம் ஏற்றுவதோ தடை செய்யப்பட்ட போதும் மாவீரர் நாளில் கார்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்க தவறுவதில்லை. தமிழரின் இதய அஞ்சலியை துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும், இயற்கையாக, கார்த்திகைப் பூ வடிவில் மாவீரர் நாளை நினைவேந்துவதை யாராலும் அடக்க முடியாது.

பண்டைய தமிழ் மன்னர்கள் தமது இராட்சியங்களுக்கு தனித்தனியான மலர்களைக் கொண்டிருந்தனர் என்பது வரலாற்றிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது.

## கார்த்திகைப் பூவின் வரலாற்றுப் பாரம்பரியம்

சோழருக்கு அத்திப் பூவும், சேரருக்கு பனம் பூவும், பாண்டியர்க்கு வேப்பம் பூவும் தேசிய மலர்களாக இருந்துள்ளன. மேற்குறிப்பிட்ட பூக்களின் மாலை களையே அவர்கள் களமுனைகளுக்குச் செல்லும் போது அணிந்து சென்றதாக வரலாறுகள் கூறுகின்றன.

இங்கே காந்தள் என்பது கார்த்திகைப் பூவின் பாரம்பரியத் தமிழ்ப் பெயராகும். இந்த வரலாற்றுச் சான்றாதாரத்தின் ஊடாகக் கார்த்திகை மலருக்கும் தமிழர் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு உள்ளங்கை நெல்லிக் கனியாகத் தெட்டத் தெளிவாகின்றது.

தேசத்தோடு மாத்திரமின்றி தேசத்தில் வாழும் மக்களின் நம்பிக்கைகளிலும் பூக்கள் பங்கு வகிக்கின்றன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு உள்ளிட்ட சங்க இலக்கியங்களிலும் செங் காந்தள் மலர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய சிறப்புமிக்க மலர்தான் தமிழ் நாட்டின் மாநில மலராகப் போற்றப் படுகிறது.

## தமிழ் நாட்டின் மாநில மலராக செங்காந்தள்!

செங்காந்தள், காந்தள் அல்லது கார்த்திகைப் பூ என்ற பெயர்களில் இந் தப் பூ அழைக்கப்படுகின்றன. ஆப் பிரிக்கா, ஆசியா கண்டங்களில் காணப் படும் இந்த மலர் தமிழ் நாட்டின் மாநில மலராகத் திகழ்வது மிகவும் சிறப்புக் குரியது.

இம் மலர் `Gloriosa Superba' என்ற தாவரவியல் பெயரைக் கொண்டது. செங்காந்தள் மலர்ச் செடியின் அனைத் துப் பாகங்களிலும் ஹகோல்ச்சிசின்' (Colchicine) என்ற அல்கலாய்டுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

கார்த்திகை மாதத்தில் பூக்கும் இந்தப் பூ வேலிகளில் மட்டுமல்ல சாலையோ ரங்கள் மற்றும் காடுகளிலும் படர்ந்து வளரக் கூடியது. குறிப்பாக, மலைகள் மற்றும் சரிவுகளில் காணப்படும் இந்த மலர் அழகிய விரல்களைப் போலவும், சுடர்கள் போலவும் காட்சியளிக்கும்.

காந்தள் மலராக மலர்ச் செடியின் வேர்ப் பகுதியை 'கண்வலிக் கிழங்கு', 'கலப்பைக் கிழங்கு', 'வெண்தோன்றிக் கிழங்கு', 'கார்த்திகைக் கிழங்கு' என்றும் அழைக்கிறார்கள்.

செங்காந்தள் செடியின் கிழங்கிலி ருந்துதான் புதிய கொடிகள் கிளைவிட்டுப் படரும். செடி வகையான இது, கொடி போல் படரக் கூடியது. இலைகளின் நுனி நீண்டும் சுருண்டும் பற்றுக் கம்பி கள் போல, அருகில் உள்ள மரம், செடி போன்றவற்றைப் பற்றிப் பிடித்து வளரக் கூடியது. இதன் இலைகளுக்குக் காம்பு கிடையாது. ஆனால், கிழங்கின் ஒவ் வொரு பகுதியின் முனையிலும் புதிய கணு முளைக்கும்.

இதன் பூக்கள் பெரியவை. முதலில் பச்சை நிறத்துடன் பூக்கும் இந்த மலர் பிறகு வெண்மை கலந்த மஞ்சள், பிறகு மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு என நிறம் மாறிக்கொண்டே போகும்.

## கார்த்திகை பூ தமிழரை காத்தவர்களின் பூ!

தீ கொழுந்துவிட்டு எரிவது போலக் காணப்படும் செங்காந்தள் பூவை 'அக்னிசலம்' என்றும் சொல்வார்கள். கிழங்கு கலப்பையைப் போன்ற தோற் றத்துடன் காணப்படுவதால், அதை 'கலப்பை' என்றும், 'இலாங்கிலி' என்றும் சொல்வார்கள்.

இலைகளின் நுனி சுருண்டு காணப் படுவதால், 'தலைச்சுருளி' என்பார்கள். மற்ற தாவரங்களைப் பற்றிக்கொண்டு வளர்வதால் 'பற்றி' என்றும் சொல் வார்கள். வளைந்து பற்றிக் கொள்வதால், 'கோடல்', 'கோடை' என்றும் அழைக் கப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் பூப்பதால் 'கார்த்திகைப் பூ' எனப்படுகிறது.

மழை காலத்தில் வனப்புடன் காணப் படுவதால், 'தோன்றி' என்றும் நாட்டு மருத்துவத்தில் 'வெண்தோண்டி' என்று அழைப்பார்கள். இதன் பூக்களின் நிறம் வேறுபடுவதால், 'வெண்காந்தள்' என் றும், 'செங்காந்தள்' என்றும் வர்ணிக் கிறார்கள். கிழங்கு பிரிந்து கணுக்கள் காணப்படுவதை, 'ஆண் காந்தள்' என்றும் கணுக்கள் இல்லாததை 'பெண் காந்தள்' என்றும் சொல்வார்கள்.

## தேனீக்களும் வட்டமிடும் காந்தள் மலர்!

செங்காந்தள் மலரில் தேன் அதிக மாகக் காணப்படுவதால், எப்போதும் வண்டுகளும் தேனீக்களும் வட்டமிட்டுக் கொண்டிருக்குமாம். பொதுவாக, மலர்கள் அனைத்துமே பூத்து உதிரக் கூடியவை.

ஆனால், செங்காந்தள் மலர் மட்டும் வாடினாலும் உதிர்வதில்லை. இந்தப் பூவை உற்றுப் பார்த்தால், கண்வலி வரும் என்று சொல்கிறார்கள், அதனால் இதை 'கண்வலிப் பூ' என்றும் கிராப் புறங்களில் அழைக்கிறார்கள்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த, வரலாறுகளைக் கொண்ட செங்காந்தள் மலர் புற்று நோய்க்கு நல்லதொரு மருந்தாகச் செயல்படுகிறது. குறிப்பாகப் புற்றுநோய் பரவாமல் தடுக்கும் கால்சிசின் (colchicine) செங்காந்தளின் விதை, கிழங்கில் அதிகமாக உள்ளது.

இதற்காகச் செங்காந்தள் செடியின் விதையை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த மருத்துவ நிறுவனங்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றன எனவும் அறியப்படுகிறது.

## மருந்தாகச் செங்காந்தள்

செங்காந்தள் பாம்புக்கடி, தேள்கடி போன்றவற்றுக்கு மருந்தாகப் பயன் படுகிறது. பாம்பு கடித்தவர்கள் இந்தச் செடியின் வேருடன் குப்பைமேனி வேர், நீலி வேர் சேர்த்து அரைத்து, அரை நெல்லிக்காய் அளவு தினமும் காலை, மாலை என மூன்று நாள்கள் சாப்

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தேசத்தின் கார்த்திகைப் பூ!

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டுவந்தால், விஷம் இறங்கும் என தமிழ் நாட்டில் கிராமிய வைத்தியர்கள் நம்புகின்றனர்.

உப்பில்லா பத்தியம் அவசியம். சிறிய பாம்புகள் கடித்தாலோ, வண்டு கடித்தாலோ இதன் இலையை அரைத்துப் பூசி சீயக்காய் தேய்த்துக் குளித்தால் விஷம் இறங்கிவிடும்.

செங்காந்தள் வேரில் செய்யப்பட்ட தைலத்தை வாரம் ஒரு நாள் தலையில் தேய்த்துக் குளித்துவந்தால் எலி, வண்டு, பூரான், சாரைப்பாம்பு கடிபட்டவர்களுக்கு விஷத்தன்மை குறைந்துவிடும்.

இந்தத் தைலத்தை மேகநோய், சொறி, சிரங்கு, படை உள்ளவர்கள் குளித்து வந்தால் நோய் குணமாகும். இத்தகைய சூழலில் புளி, புகைப் பிடித்தல், போதைப் பொருள் பயன் படுத்தக் கூடாது.

வாதநோய், மூட்டுவலி, தொழு நோயைக் குணப்படுத்துவதுடன் பால் வினை நோய், வெண்குஷ்டம் போன்ற வற்றைக் குணப்படுத்தவும் இது பயன்படுகிறது. பிரசவவலியைத் தூண்டும் நல்ல மருந்தாகவும் இது செயல்படுகிறது.

### மகத்தான பலன்கள்

பிரசவத்தின் போது நஞ்சுக் கொடி இறங்காமல் அவதிப்படும் பெண்களுக்கு பச்சை செங்காந்தள் வேர்க் கிழங்கை அரைத்து தொப்புள், அடி வயிறு, உள்ளங்கை, உள்ளங்கால் போன்ற இடங்களில் தடவுவார்கள். உடனடியாக நஞ்சுக்கொடி இறங்கிவிட பச்சைச் செங்காந்தள் கிழங்கை சிறு துண்டுகளாக நறுக்கி அது மூழ்குமளவு வேப்பெண்ணெய் ஊற்றிக் காய்ச்ச வேண்டும். கிழங்குகள் மேலே மிதக்கும்போது அடுப்பிலிருந்து இறக்கி, ஆறவைத்து, பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.


பாரிசவாயு, தலைவலி, கழுத்து நரம்புவலி போன்றவற்றுக்கு இந்த எண்ணெயைத் தேய்த்துவந்தால், குணம் கிடைக்கும். மேலும் தலைப் பேன்களை ஒழிக்கும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

செங்காந்தள் செடியின் கிழங்கு ஆயுள்வேதம் மற்றும் யுனானி மருந்துகளில் பல்வேறு விதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

### தமிழர் தேசத்தின் அடையாளம் கார்த்திகைப் பூ!

தமிழர் தேசியத்தின், தமிழர் தேசத்தின் அடையாளச் சின்னமாக பூக்கள் விளங்குவது யாவரும் அறிந்ததே. பூக்கள் அந்தந்த தேசியத்தினதும், தேசத்தினதும் வரலாற்று சமூக பண்பாட்டின் பால் பின்னிப்பிணைந்து உள்ளதை நாம் காணலாம்.

ஒவ்வொரு நாட்டினதும் தொடர்பு பட்டுள்ள மலர்கள் தேசியப் பூக்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அந்தந்த தேசியங்களால் கௌரவிக்கப்படுவதும், தேசியக் கொடிக்குச் சமமாகப் பேணப் படுவதும், தொன்றுதொட்டு நிலவிவரும் மரபு.



தமிழர்களின் தேசியப் பூவாக, தமிழீழத்தின் தேசியப் பூவாக கார் காலத்தில் மலர்ந்திடுவதும், தமிழீழ தேசியக் கொடியின் வர்ணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழீழத் தேசிய நாளாம் மாவீரர் நாள்களில் கொடிபரப்பி பூத்துக் குலுங்குவதும், தமிழீழ தேசமெங்கும் பரவி முகிழ் விடுவதுமான காந்தாள் (கார்த்திகை) பூ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### தேச நம்பிக்கைளின் பூக்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி தாய்நாட்டுக்காக தமது உயிரை ஈந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களையும், அவர்களோடு சேர்ந்து போரிட்டு உயிர் ஈந்த எல்லைப்படை துணைப்படை வீரர்களையும், புலிகளோடு இணைந்து உயிர் ஈந்த ஈழ புரட்சி இயக்க (ஈரோஸ்) உறுப்பினர்களையும், மற்றும் குட்டிமணி, தங்கத்துரை போன்ற வேறு பல ஈழப் போராட்ட போராளிகளையும் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்து, பெருமைப் படுத்தும் நாள் மாவீரர் நாளாகும்.

இதற்குரிய நாளாக நவம்பர் 27 ஆம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் 1989 ஆண்டில் அறிவிக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் நினைவு கூரும் நாள் போன்று மற்ற நாடுகளில் போர் வீரர்களை நினைவு கூரும் நாள்களோடு தமிழீழ மாவீரர் நாள் ஒப்பிடத்தக்கது.

ஈழத்தமிழர் அனேகர் வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும், ஈழப் போராட்டத்தில் மடிந்த வீரர்களுக்கு மரியாதை செய்வர்.

ஈழப் போரில் இறந்த போராளிகளை நினைவு கூருவது, மதிப்பது தமது அடிப்படை கடமைகளில், கொள்கைகளில் ஒன்றாகத் தமிழ் மக்கள் கருதுகிறார்கள். முதன் முதலில் மாவீரர் நாளாக நவம்பர் 27 விடுதலைப் புலிகளால் 1989 அறிவிக்கப்பட்டது.

தமிழீழ மாவீரர் நாளாக இந்த நாளைத் தேர்ந்தெடுத்ததற்குத் தமிழீழ போராட்ட வரலாற்றுடன் இணைந்த ஒரு முக்கிய காரணம் உள்ளது. இந்த நாளில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதலாவது போராளியான சங்கர் (செ. சத்தியநாதன்) வீரமரணம் அடைந்தார்.

### மாவீரர் நாள் அடையாளமாக கார்த்திகை பூ!

உலக அரங்கில் ஈழத் தமிழினத்தின் குறியீடாக, வேறு எந்தப் பூவை விடவும் பொருத்தமான தேர்வாகக் கார்த்திகைப் பூ சிறப்புப் பெற்றுள்ளது. ஆனால் கார்த்திகைப் பூ சொல்லும் செய்தியை, அது கமழும் தேசிய வாசத்தை நுகர் வதற்குப் பேரினவாதம் தயாராக இல்லை.

இலங்கைத் தீவின் ஒரே ஒரு பூ நீலோற்பலம்தான் என்று அதன் நாசி வழிகள் எங்கும் நீலோற்பலத்தால் அடைத்து வைத்திருக்கிறது. இயற்கை, அதன் பரிணாமப் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கி எறிந்து தன் பல்லினத்துவத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது என்பதை வரலாறு பூராவும் நிரூபித்தே வந்துள்ளது.

கார்த்திகைப் பூவும் கார்த்திகைக் கனவுகளும் ஈழத்தமிழர்களதும் புலம்பெயர் தமிழர்களதும் வாழ்வில் மறக்க முடியாத நாளாக கார்திகை 27 ஆம் திகதி காணப்படுகிறது.

மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் தம் உயிர்களை ஆயுதமாக்கிப் போராடி மடிந்த மாவீரர்களை நினைவேந்தும் நாள் மாவீரர் நாளுக்கென்றே பிறந்தால் போல் இந்த மாதத்திலேயே கார்திகைப் பூக்களும் மலரும்.

### மாவீரர்களை அஞ்சலிக்கும் பூ!

தமிழீழத்தை அடையாளப்படுத்தும் சிகப்பு, மஞ்சள் வர்ணங்களோடும் மாவீரர் நாளில் ஏற்றப்படும் சுடரைப் போன்ற தோற்றத்துடனும் கார்திகை மலர்கள் எவருக்கும் சொல்லாமலேயே மாவீரர்களை நினைவூட்டும்.

2009இல் போர் மௌனித்த பின்னரும், எத்தகைய அடக்குமுறை வந்தபோதும் மாவீரர் நாளில் ஆலயங்களில் மணி ஒலிப்பதோ, தீபம் ஏற்றுவதோ தடைசெய்யப்பட்ட போதும் கார்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்க தவறவில்லை. தமிழர்களின் அஞ்சலியை துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும் இயற்கை கார்த்திகைப் பூ வடிவில் மாவீரர் நாளை நினைவேந்துவதை யாராலும் அடக்க முடியாது.

# உத்தராகண்ட் சுரங்க மீட்பு பணியில் முன்னேற்றம்: கதவின் முன்னால் நிற்கிறோம் என அறிவிப்பு



உத்தராகண்ட் சுரங்கத்துக்குள் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், "நாங்கள் கதவின் முன்னால் நிற்கிறோம். விரைவில் மீட்பு பணிகள் முடிவுக்கு வரும்" என்று சர்வதேச சுரங்க நிபுணர் அர்னால்ட் டிக்ஸ் தெரிவித்துள்ளார்.

மீட்பு நடவடிக்கைகள் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "தற்சமயம் நாம் கதவின் முன்பக்கம் இருக்கிறோம், அதை தட்டவும் போகிறோம். கதவின் அந்தப் பக்கம் நமது தோழர்கள் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். நான் அங்கே சென்று என்ன நடக்கிறது என்று பார்க்கப் போகிறேன்." என்றார்.

பிரதமர் அலுவலகத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் பாஸ்கர் குல்பே கருத்து தெரிவிக்கையில், "துளையிடும் பணிகள் முழுமையாக நிறைவடைந்து உள்ளே இருக்கும் தொழிலாளர்களை நெருங்குவதற்கு இன்னும் 12 முதல் 14 மணி நேரம் ஆகலாம்.

அதன்பின்னர் ஒவ்வொரு தொழிலாளர்களாக வெளியே மீட்டுக் கொண்டு வர மேலும் மூன்று மணி நேரங்கள் எடுக்கும். இந்தப்பணி தேசிய பேரிடர் மீட்பு படையின் உதவியுடன் செய்யப்படும்." என்றார்.

சுரங்கப் பாதைக்குள் சிக்கி இருக்கும் தொழிலாளர்களை மீட்கும் பணியில் சுரங்கத்துக்குள் 45 மீற்றர் தூரம் தோண்டிய நிலையில் மீட்புக் குழுவினர் பல்வேறு தடைகளைச் சந்தித்தனர். நேற்று அமெக்காவின் ஆஜர் எந்திரம் ஒரு இரும்புக் கம்பியில் தட்டி நின்றது. பின்னர் அந்தக் கம்பி அகற்றப்பட்டது. அதற்கு அடுத்த நாள் துளையிடும் எந்திரத்தின் பாதையில் ஒரு இரும்பு தடையை ஏற்படுத்தியது. அதுவும் அகற்றப்பட்டு மீட்புப் பணிகள் தொடர்ந்து வருகிறது.

இதனிடையே 41 தொழிலாளர்களும் மீட்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு உடனடியாக மருத்து உதவிகள் வழங்க அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து உத்தரகாசி பொலிஸ் கண்காணிப்பாளர் அர்பன் யதுவன்ஷி கூறுகையில்,

"தொழிலாளர்கள் மீட்கப்பட்ட பின்னர் எடுக்கப்படவேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளன. மீட்கப்படும் தொழிலாளர்கள் பொலிஸாரின் துணையுடன் மருத்துவமனைக் கொண்டு செல்லப்பட்டு அவர்களுக்கு தேவையான சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும்.

தொழிலாளர்கள் சின்யாலிசவுருக்கு கொண்டு செல்லப்படுவார்கள், தேவைப்பட்டால் ரிஷிகேஷ்க்கு கொண்டு செல்லப்படலாம் என்று நான் கருதுகிறேன்" என்றார்.

# 'குரல்வளை பாதிப்பால் பேச முடியவில்லை': அவகாசம் கேட்டார் நடிகர் மன்சூர் அலிகான்

குரல்வளை பாதிக்கப்பட்டு பேச சிரமப்படுவதால் நேரில் ஆஜராக பொலிஸாரிடம் நடிகர் மன்சூர் அலிகான் கால அவகாசம் கேட்டுள்ளார்.

சமீபத்தில் வெளியான காணொலி ஒன்றில் பத்திரிகையாளரின் கேள்விக்கு பதிலளித்த மன்சூர் அலிகான் நடிகை த்ரிஷா குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியிருந்தார். இந்தப் பேச்சுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த விவகாரத்தில் மன்சூர் அலிகான் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக டி.ஜி.பிக்கு தேசிய மகளிர் ஆணையம் பரிந்துரை செய்திருந்தது.



இதனையடுத்து சென்னை ஆயிரம் விளக்கு பொலிஸார் நடிகர் மன்சூர் அலி கான் மீது இரு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மேலும் விசாரணைக்கு இன்று நேரில் ஆஜராக கோரி அவருக்கு ஆயிரம் விளக்கு மகளிர் பொலிஸார் அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.

இந்த நிலையில், குரல்வளை பாதிக்கப்பட்டு பேச சிரமப்படுவதால் நேரில் ஆஜராக பொலிஸாரிடம் நடிகர் மன்சூர் அலிகான் கால அவகாசம் கேட்டு கோரிக்கை மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில் "எனது குரல்வளை 15 நாட்கள் தொடர் இருமலால் நேற்று மிகவும் பாதிக்கப்பட்டு பேச மிகவும் சிரமமாக இருப்பதால், நான் மருத்துவ சிகிச்சையில் இருந்து மீண்டு, நாளை தங்களை சந்திக்க தாங்கள் குறிப்பிடும் நேரத்தில் வர அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஜம்மு காஷ்மீரில் மோதல்: 4 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

ஜம்மு காஷ்மீரில் இடம்பெற்ற மோதலில் இந்திய இராணுவத்தை சேர்ந்த 4 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 2 பேர் இராணுவ அதிகாரிகள் என்றும், 2 பேர் இராணுவ வீரர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஜோரி பகுதியில் நடைபெற்று வரும் இந்த என்கவுன்டரில் அவர்கள் நால்வரும் உயிரிழந்துள்ளனர். அந்தப் பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் சிறப்புப் படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு படையினர் கடந்த 19 ஆம் திகதி சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

அந்தப் பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் உறுதியானதை தொடர்ந்து இருதரப்புக்கும் இடையில் துப்பாக்கி தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இராணுவத்தை சேர்ந்த நான்கு பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ளிக் கிழமைக்கு முன்னர் பணயக்கைதிகள் விடுவிக்கப்படமாட்டார்கள்: இஸ்ரேல் அறிவிப்பு





ஹமாஸ் அமைப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகள் வெள்ளிக் கிழமைக்கு முன்னர் விடுவிக்கப்பட மாட்டார்கள் என இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக 50 பணயக்கைதிகள் விரைவில் ஹமாஸ் அமைப்பினரால் விடுவிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

போர் நிறுத்தம் தொடர்பில் கட்டார் அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த விடயம் சாத்தியமற்றது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையில் 48 நாட்களாக மோதல் இடம்பெற்று வரும் நிலையில் இதுவரை 13 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், காசாவுக்கான உணவு மற்றும் குடிநீர் வசதிகளை இஸ்ரேல் நிறுத்தியுள்ளதால் அங்குள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா: சீனாவில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கை

சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா தொற்று வேகமாகப் பரவிவருவதால் அது குறித்து அந்த நாட்டு சுகாதாரத் துறை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது.

மேலும் இந்த நிமோனியா தொற்று தொடர்பான தகவல்களைப் பகிரும்படி அந்நாட்டுக்கு உலக சுகாதார நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகச் செய்திகளின்படி சீன மருத்துவமனைகளில் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்கு அழைத்துவரப்படும் போக்கு மிக அதிகமான அளவில் அதிகரித்துள்ளது. குழந்தைகள்



அனைவருமே சுவாசக் கோளாறுடனேயே அழைத்துவரப்படுகின்றனர் என்றும் அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக நவம்பர் 12 இல் சீன தேசிய சுகாதார ஆணையம் செய்தியாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது. அதில், க கொரோனா கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதன் எதிரொலியாகவே இந்தப் புதிய தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பரில் சீனாவில் பரவிய கொவிட் -19 தொற்றின் காரணமாக உலகம் முழுவதும் பல லட்சம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தற்போது பரவும் மர்ம நிமோனியா தொற்று உலக நாடுகளைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.

# நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் வெடிவிபத்து: இருவர் பலி!

அமெரிக்கா – கனடா எல்லைக்கு அருகில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மகிழுந்து ஒன்றே இவ்வாறு வெடித்துச் சிதறியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான எல்லை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

